**www.kalvikural.com**

தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள், சென்னை 6

ந.க.எண்.19850/சி5/இ2/2014 நாள் ௨௭.11.2017

பொருள் தமிழ்நாடு பள்ளிக்கல்வி சார்நிலைப்பணி – அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் 23.08.2010க்குப் பின்னர் பட்டதாரி ஆசிரியர்கள் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டமை– ஆசிரியர் தகுதித் தேர்வு தேர்ச்சி நிபந்தனை, தகுதிகாண் பருவம் முடித்து ஆணை வழங்குதல் – அறிவுரைகள் –சார்பாக

பார்வை 1) அரசாணை (நிலை) எண்.181, பள்ளிக்கல்வித்துறை, நாள் 15.11.2011
2) சென்னை–6, பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்.112830/சி5/இ2/2011 நாள் 19.12.2011
3) நேரடி நியமனத்திற்கான ஆசிரியர் தகுதித் தேர்வு சார்ந்து சென்னை–6, ஆசிரியர் தேர்வு வாரிய அறிவிக்கை 2012 நாள்28.05.2012 மற்றும் Corrigendum issued to Notification No.04/2012 dated 7.3.2012
4) சென்னை–6, பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.19850/சி5/இ2/2014 நாள் 1.10.2014

ஆசிரியர் தகுதித் தேர்வு நடத்துவது சார்ந்த அரசாணை (நிலை) எண்.181, பள்ளிக்கல்வித்துறை, நாள் 15.11.2011 வெளியிடப்பட்ட பிறகு டிசம்பர் 2011ல் பணி நியமனம் வழங்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கு நியமனம் பெற்ற 5 ஆண்டுகளுக்குள் கண்டிப்பாக ஆசிரியர் தகுதி தேர்வு (TET) தேர்ச்சி பெற வேண்டும் என நியமன ஆணையில் குறிப்பிடப்பட்டது.

இந்த பட்டதாரி ஆசிரியர்களுக்கு பொதுவான பணிவரன்முறை ஆணைகள் வழங்கப்பட்டு இருப்பினும், 5 ஆண்டுகளுக்குள் ஆசிரியர் தகுதித்தேர்வில் தேர்ச்சி பெற வேண்டுமென குறிப்பிடப்பட்டதால் தகுதிகாண் பருவம் முடிக்கப்படாமல் இருந்ததையடுத்து, பார்வை (4)ல் காண் இவ்வியக்க செயல்முறைகள் வாயிலாக மேற்காணுமாறு (15.11.2011க்குப் பிறகு) பணி நியமனம் பெற்றவர்களில் 23.08.2010க்கு முன்னர் சான்றிதழ் சரிபார்ப்புபணி முடித்தவர்களுக்கு ஆசிரியர் தகுதி தேர்வு தேர்ச்சி பெற வேண்டிய அவசியமில்லை என அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டது.

ஆனால், 23.08.2010க்கு பின்னர் சான்றிதழ் சரிபார்ப்பு பணி முடித்தவர்களுக்கு இந்த நிபந்தனை தளர்த்தப்படாமல் உள்ளதால் அவர்கள் பொருட்டு தகுதிகாண் பருவம் முடித்து முதன்மைக்கல்வி அலுவலர்கள் மூலம் ஆணைகள் வழங்கப்படாத நிலை உள்ளது.

இப்பொருள் குறித்து பரிசீலிக்கும்போது ஆசிரியர் தேர்வு வாரிய அறிவிப்பு எண் 04/2012 நாள் 07.03.2012ல் கீழ்க்காணுமாறு உள்ளதை கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது .

"Where an appropriate Government or local authority of a school has issued an advertisement to initiate the process of appointment of teachers prior to the date of this Notification such appointments may be made in accordance with the NCTE (Determination of Minimum qualification for Recruitment of Teachers in Schools) Regulations, 2001 (as amended from time to time).

www.kalvikural.com

Exemption to persons whose appointment process has been initiated prior to NCTE Notification dated 23.08.2010"

மேலும் Direct Recruitment of Tamil Nadu Teacher Eligibility Test 2012 -TRB Notifiation dated 28.05.2012 ல் கீழ்க்காணுமாறு குறிப்பிடப்பட்டுள்ளதையும் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

" The following candidates are not required to write Teacher Eligibility Test.

a. All Appointments made prior to the date of Notification issued by the National Council for Teacher Education (NCTE) i.e., 23.8.2010.

b. Appointments made based on the advertisement issued before 23.8.2010 and appointment orders issued after 23.8.2010.

c. Appointments made based on the Certificate Verification (CV) conducted before 23.8.2010 and appointment orders issued after 23.8.2010."

இந்நிலையில், ஆசிரியர் தகுதித் தேர்வு சார்ந்த அரசாணை (நிலை) எண்.181, பள்ளிக்கல்வித்துறை, நாள் 15.11.2011 வெளியிடப்பட்ட பிறகு பட்டதாரி ஆசிரியர்களாக பணி நியமனம் பெற்றவர்களில் பணி நியமனத்துக்கான ஆசிரியர் தேர்வு வாரிய விளம்பரம் 23.08.2010க்கு முன்னரே வெளியாகி இருப்பின் (advertisement process initiated before 23.08.2010) அவர்கள் பொருட்டும் ஆசிரியர் தகுதி தேர்வு தேர்ச்சி பெற வேண்டிய அவசியம் இல்லை என்று அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது. இதனால் அவர்கள் சார்பில் தகுதிகாண் பருவம் முடித்து ஆணை வழங்குவதில் காலதாமதம் ஏதுமின்றி செயல்படவும் அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்

இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி)

பெறுநர்

அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்கள்